BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# பணியாளர்களுக்கான  தடுப்பூசி செலுத்தும் கொள்கையை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் அறிமுகம் செய்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர் 1, 2021) – இன்று நடந்த சிறப்பு கவுன்சில் கூட்டத்தைத் தொடர்ந்து, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம், அனைத்து ப்ராம்ப்ட்டன் ஊழியர்களுக்கும் தடுப்பூசி கொள்கை ஒன்றை செயல்படுத்த தொடர்ந்து முயற்சிகளை முன்னெடுக்கும்.

கோவிட் -19 தொற்று பரவத் தொடங்கியதில் இருந்து, பல்வேறு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில், பீல் பொது சுகாதார வழிகாட்டுதலின் கீழ், நகர சேவைகள் அளிப்பதில், தொழிலாளர் பங்காளிகள் மற்றும் பீல் பிராந்தியத்தில் இருக்கும் நகராட்சிகளுடன் நகர ஊழியர்கள் கூட்டாக பணியாற்றினர்; இது, நகரத்தின் சேவைகளை வழங்குவதில் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிப்பதற்கேயாகும். இந்தக் கொள்கையானது, நகரத்தின் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரை COVID-19 க்கு எதிராக பாதுகாக்க உதவுகின்ற அதே அணுகுமுறையை பின்பற்றும்; அதே வேளையில்,  நகரம் தொடர்ந்து தனது சமூகத்திற்கு பாதுகாப்பாக சேவை செய்ய முடியும் என்பதை உறுதி செய்யும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளில் தடுப்பூசி செலுத்திக்கொண்ட சான்று தேவை என்று ஒன்ட்டேரியோ அரசாங்கத்தால் இன்று அறிவிக்கப்பட்டது; இந்த தகவலையும் நமது நகரக் கொள்கை பரிசீலனை செய்யும்.

பீல் பிராந்தியத்தில் மிகப்பெரிய வேலை வாய்ப்பளிக்கின்ற அமைப்புக்களில் ஒன்றாக இருந்தவாறு, ப்ராம்ப்ட்டன் நகரம் 6,000 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டிருக்கிறது. ஒரு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான பணியிடம் கொடுப்பதற்கு அர்ப்பணிப்பு கொண்டுள்ளது; அந்தவகையில், ஊழியர்கள் மற்றும் அவர்கள் சேவை செய்யும் சமூகத்தின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கிறது. இந்தக் கொள்கையானது  நகரத்தின் அனைத்து துறைகளிலும் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் பொருந்தும்.

விலக்கு அளிக்கப்பட்ட நபர்களுக்கு ஒன்ட்டேரியோ மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் விலக்கு அளிக்கப்படும்.

அமலாக்கத் தேதி உட்பட முழு கொள்கை வடிவமும் வருவிருக்கும் வாரத்தில் இறுதி செய்யப்படும்

-30-

BRAMPTON

**Media Release**

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca